1972 மார்ச் 30]

திரு. என். கே. பழனிசாமி : சார் இந்த சேலம் லிக்னைட் விஷயத்தை மத்திய சர்க்கார் மின்சாரத்தை கன்ஷசன் ரேட்டில் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டு இருக்கிறார்களா ? அப்படியானால், சர்க்கார் பதில் என்ன சொன்னார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவர்கள் சில கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். ஆனால் குறைந்த விகிதத்தில், குறைந்த விலையில் தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு என்பதற்கு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு அரசுகளின் கருத்தை வெளியிடுவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

Iron Deposits in Kavuthimalai Hill.

*803 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there is an iron indication or deposit in the Kavuthimalai Hill area near Thiruvannamalai in North Arcot District ; and

(*b*) if so, the details thereof and the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் (United Nations Development Programme) உதவியோடு தமிழ்நாடு கனிவள ஆராய்ச்சிப் பிரிவு (Tamil Nadu Mineral Development Project) கவுத்திமலை, வேடியப்பன்மலை மற்றும் திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள பிற மலைகளிலும், சுமார் 140 மில்லியன் டன் இரும்புத் தாதுக்கள் கிடைக்கும் எனக் கண்டுபிடித்துள்ளது. இந்த இரும்புத் தாதுக்களை காந்தத்தின் மூலம் செறிவு படுத்த முடியும் என விரிவான ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகின்றது. ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் விவர அறிக்கை தயாரிக்கும் திட்டங்களில் இதையும் ஒன்றாகச் சேர்க்கக் கோரும் இவ்வரசின் கோரிக்கை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, கவுத்திமலைப் பகுதியை அண்மையில் அமைச்சரவர்கள் சென்று பார்த்தார்கள். அப்போது ஜப்பான் நிபுணர்கள் அங்கே ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன கருத்தை வெளியிட்டார்கள் ? அமைச்சர்கள் இடத்தில் என்ன சொன்னார்கள் ? அதை உடனடியாக ஆரம்பிக்கும் ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இரும்புக்கனியும் கிட்டத் தட்ட சேலம் இரும்புக்கனியைப்போல் "ஃபி" கன்டன்ட் இருப்பதாகக் கண், பிடித்து உள்ளார்கள். ஜப்பான் நிபுணர்கள் இரண்டு நிறுவனத்தினர் (Messrs. Toyo Menka KaishaLimited and M/S Maruberi ii DA. Company Limited) அந்த இரும்புத் தாதுவை எடுத்துச் சென்று பரிசீலித்து அவர்களுடைய அறிக்கையை நம்முடைய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, திருவண்ணாமலை, கவுத்திமலைப் பகுதியில் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் வந்து ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் மற்ற மலைகளிலும் இரும்பு ஆராய்ச்சி செய்யப்படும் என்று குறிப்பிட்டார்கள். நான் இந்த மன்றத்தில் அடிக்கடி குறிப்பிடும் எனது பகுதியில் உள்ள மாணிக்கவல்லி மலையிலும் ஓரளவு இரும்பு இருக்கிறது. அந்த இடத்திலும் ஜப்பான் நிபுணர்களை ஒரு முறை அந்தப் பகுதியில் ஆராய்ச்சி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இரும்புக்கனி பற்றி ஆராய்ச்சி செய்வது நாம்தான். அந்த மலையில் மட்டும் அல்ல, எல்லா மலையிலும் தொடர்ந்து செய்யப்படும். ஜப்பான் நிபுணர்கள் இந்த இரும்பை எடுத்துச் சென்று, எந்த வகையில் தொழில் தொடங்கலாம் என்று ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

மேட்டூர் வட்டத்திற்கு சிறிய அணைத் திட்டங்கள்

*804 வினா திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மேட்டூர் தாலுகாவில் பாலமலை கார்டு, கார்டு என்ற இரண்டு சிறிய அணைத் திட்டங்கள் கீழ் மட்டத்தில் பரிசீலனை முடிந்து அரசாங்கத் திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், மேற்படி திட்டங்கள் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) & (இ) முல்லிக்காடு கிராமத்திற்கு அருகில் உள்ள பாலமலை ஓடையின் குறுக்கே கண்மாய் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. கார்டுகாடுக் கிராமத்திற்கு அருகே உள்ள தும்பல் காட்டுப் பள்ளத்தின் குறுக்கே ஒரு ஏரி அமைக்கும் திட்டம் தல அதிகாரிகளின் மறு பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார் இந்த தும்பல் காட்டுப் பள்ளத் திட்டத்தில், அங்கே தண்ணீர் தேங்கி நிற்பதற்கு காட்டிலாக்கா · நிலம் வழங்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நிலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? இந்த திட்டங்களெல்லாம் தவிர, கருங்காடு, கொத்தநேரி, நோணி மடுவு போன்ற திட்டங்கள் 1967-ல் இருந்து பெண்டிங்காக இருக்கிறது. அது எப்போது அமல் செய்யப்படும் ?

1972 மார்ச் 30]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த தும்பல் காட்டுப் பள்ளம் ஏரி விஷயமாக வருவாய் வாரியம் சேலம் மாவட்ட ஆட்சியாளர் எடுத்துக்கூறிய கருத்துக்களின்படி குறைந்தளவு வனநில ஆர்ஜிதம் உள்ள வகையில் இத்திட்டத்தை மறு பரிசீலனை செய்யுமாறு தலைமைப் பொறியாளரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தத் திட்டம் சேலம், தருமபுரி வட்டம் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சிமிட்டிச் சாலைகள்

* 805 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சிமிட்டிச் சாலைகள் அமைப்பது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

மதுரை மாவட்டத்திலுள்ள அணைக்கட்டுகள்

* 806 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டத்தில் உல்லாசப் பயணிகள் காண்பதற்குரியவையாக அரசு அங்கீகரித்துள்ள அணைக்கட்டுகள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

மதுரை மாவட்டத்தில், வைகை நதி அணைக்கட்டும், மஞ்சளாறு அணைக்கட்டும், உல்லாசப் பயணிகள் காண்பதற்குரியவை. இப்பொருள் பற்றி அரசு எதும் அங்கீகாரம் அளிக்கவில்லை.

வேதாரண்யத்திலுள்ள நினைவுச் சின்னத்துக்குச் செல்ல சாலைகள்

* 807 வினு—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் நடந்த இடத்திலுள்ள நினைவுச் சின்னத்தை மக்கள் சென்று காண சாலைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?